உ
ஓம் சக்தி துணை

# துர்க்கா மஞ்சரி

"முக்கண்ணியை தொழுவார்க்கு ஒருதீங்கில்லை"
அபிராமி பட்டர்


பார்த்திப வருடம் புரட்டாதி 26ம் திகதி வள்ளுவர் ஆண்டு 2036 (12-10-2005)

வெளியீட்டாளர்
அருள்மிகு துர்க்காதேவி இந்து தேவஸ்தானம்

மலர்: 7 இதழ்: 2



7468 EDMONDS STREET, BURNABY, B.C. V3N 1B2. TEL: 604-521-3472


விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் - விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாம் தன்மையினால்
கண்ணிற் பணிமின் கனிந்து

# ஆலயமும் நாமும்

அம்பிகை அடியார்களே!

உங்கள் கைகளில் தவழுகின்ற துர்க்கா மஞ்சரி நவராத்திரி சிறப்பிதழாக மலர்கிறது. வழமைபோல ஆன்மீக மணம் கமழும் பல ஆக்கங்களைத் தாங்கி வருகிறது. ஆலய வருடாந்த உற்சவத்தினை பதினெட்டு நாட்களும் மிகவும் சிறப்பான முறையில் அன்னையின் பேரருள் துணையோடும், உங்கள் பேராதரவுடனும் பக்தி பூர்வமாக நடாத்தி முடித்திருக்கிறோம். இதேபோலவே நவராத்திரி விரதநாட்களையும் நிறைவாக நடாத்தியிருக்கிறோம். அன்னையின் ஆலய வளர்ச்சியை கண்கூடாகக் காண்கிறோம். இன்னும் ஒரு சில மாதங்களில் எங்கள் ஆலய கட்டிடத்தை வாங்கியதாலான வங்கிக் கடனை உங்களுடைய பங்களிப்புக்களுடன் முற்றாக அடைத்துவிடுவோம் என்று நம்புகிறோம்.

எங்களுடைய குழந்தைகளின் எதிர்கால நலம் கருதி, சைவ, தமிழ் வகுப்புக்களை, இளையோருக்கும் முதியோருக்கும் பயன் தரும் கணனி வகுப்புக்களை தொடர்ந்து நடாத்தி வருகிறோம். இந்த வருடம் ஒரு நாளைய வசந்த கால சுற்றுலாவை ஒழுங்கு செய்தபோது பிள்ளைகளும், பெற்றோர்களும், மற்றும் ஆலய அடியார்களும் மகிழ்வுடன் இணைந்ததை மறக்க முடியாது. எங்கள் பாடசாலையின் வளர்ச்சியை கருத்தில் கொண்டு ''ஆசிரியர்கள் தேவை'' என்றும், ஆலயத்தின் நாளாந்த நடவடிக்கைகளை கவனிக்க ஒரு ''பொது உதவியாளர்'' தேவை என்றும் விளம்பரம் செய்தோம். அது இன்று வரையும் எந்தவிதமான பயனையும் தரவில்லை என்பதை மிகவும் மனவருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

வழமையைவிட இப்போது அன்னைக்கு அபிசேகமும், ஆராதனைகளும் அடிக்கடி நடாத்தப்படுவதைக் காண்கிறோம். இது அன்னையின் அருளை அடியவர்கள் பெரிதும் உணர்வதையே காட்டி நிற்கிறது. மகிழ்ச்சிக்கு உரிய விடயம். ஆலயத்தின்கண் வீற்றிருக்கும் அம்பிகையை தனியே பூசைகள் செய்து ஆராதிப்பதால் மட்டுமோ, அவளுடைய புகழைப் பாடுவதால் மட்டுமோ அவளருளைப் பூரணமாகப் பெற்றுவிட முடியாது. அன்னைக்குப் பூசை செய்யும் அடியார்கள், அன்னைக்கும் அடியவர்களுக்கும் படைக்கும் பிரசாதத்தை தயாரிப்பது தொடக்கம் மண்டபத்தையும். மடப்பள்ளியை (சமயலறையை)யும் சுத்தம் செய்துவிட்டு செல்ல வேண்டிய முக்கிய கடமையை, தொண்டினை தவிர்த்துவிட்டுச் செல்ல கூடாது. அந்தக் கடமைகளை நிறைவேற்றுவது யார் என்று தயவு செய்து ஒரு கணம் சிந்தித்துப் பாருங்கள். ஆலயத்திலே வேதனத்திற்கு வேலை செய்பவர்கள் யாரும் கிடையாது என்பதை பூசை செய்யும் அடியார்கள் நினைவில் கொள்ள வேண்டும். தொண்டு செய்வதற்கு தொண்டு மனப்பான்மையுடன் சிலர் வருகிறார்கள் என்பதனால் உங்கள் கடமையை நீங்கள் தட்டிக் கழித்து விட்டுச் செல்லக் கூடாது. இது உங்களுடைய ஆலயம். இதன் சகல விதமான செயற்பாடுகளிலும் உங்களுக்குப் பங்குண்டு. ஆலயத்தின் சிறப்பான இயக்கத்திற்கு நிர்வாக சபைக்கு சில தொண்டர்கள் தெரிவு செய்யப் பட்டு, நிர்வாகக் கடமைகளை முடிந்தவரையில் செய்து கொண்டு இருக்கிறார்கள். சமைப்பதற்கும் சுத்தம் செய்வதற்கும் மட்டும் நிர்வாக சபையில் யாரும் தெரிவு செய்யப்படவில்லை. நிர்வாக சபையில் உள்ள தொண்டர்களும், மற்றவர்களைப் போல வேலைக்கு செல்ல வேண்டும். அவர்களுக்கும் குடும்பப் பொறுப்புகளும், பிரச்சினைகளும் உண்டு என்பதை மற்றவர்களும் புரிந்து கொள்ள வேண்டும். நிர்வாக சபையிலுள்ள தொண்டர்கள் முக்கிய பொறுப்புக்களை ஏற்றிருக்கிறார்கள் என்றால், அவர்களுக்கு உதவ வேண்டிய

பொறுப்பு மற்றவர்களுடையது என்பது சொல்லித் தெரிய வேண்டிய ஒன்றல்ல. ஆலயத்தின் இயக்கமும் ஒரு கூட்டு முயற்சி என்பதை அனைவரும் உணர்ந்து, செயற்படவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம். ஆலயத் திருத்தொண்டு செய்ய பூர்வ புண்ணிய பலன் இருக்க வேண்டும். அன்னையின் ஆலயத்தில் எத்தனையோ திருத்தொண்டுகள் உங்களுக்காகக் காத்துக் கிடக்கின்றன. "பங்கு கொள்ளுங்கள்" என்று அன்புடன் வேண்டி, அனைவரும் நலமுடன் வாழ அம்பிகையை வேண்டி அமைகிறோம்.

சித்த சுத்தி உண்டுபண்ணுவது சேவை. அகங்காரத்தை அகற்றுவது சேவை. ஜீவபோதத்தை ஒடுக்குவது சேவை. எவ்வுயிரையும் தன்னுயிராய்ப் பார்க்கும்படி செய்வது சேவை. பரபோதத்தை வளர்ப்பது சேவை. பணிவிடை பண்ணுபவன் வள்ளல் ஆகிறான். அவன் வாழ்வைப் பெருவாழ்வாக அது மாற்றுகிறது.

அன்பர் பணி செய்ய எனை ஆளாக்கி விட்டுவிட்டால்
இன்பநிலை தானே வந்து எய்தும் பராபரமே! - தாயுமான சுவாமிகள்

- நிர்வாக சபைத் தொண்டர்கள்

# நவராத்திரி நாயகி

ஆக்கம்: சு.கி.சிவம்

அம்மா...!

தமிழில் இது ஒரு சொல் எனப் பலர் நினைக்கிறார்கள். இல்லை..! இல்லை...! ஓரே சொல்லில் தமிழில் எழுதப்பட்ட காவியம்தான் அம்மா. அன்பு, அபரிமிதமான கருணை, ஆவேஷம், ஆக்ரோஷம், அசட்டுத்தனம், அதிசயமான அறிவாற்றல், ஆனந்த அனுபூதி இவற்றின் இனிய கலவையே அம்மா!

உலகத்தில் ஐம்பத்தொரு சக்திபீடங்களே உண்டு என்று புராணக்காரர்கள் சொல்கிறார்கள். தவறு. ஒவ்வொரு தாயின் கருப்பையும் ஒரு சக்திபீடமே. ஈ, எறும்பு, பசு முதல், சகல ஜீவராசிகளின கருப்பைகளும் பராசக்தியின் சக்தி பீடமே என்பதை சாக்தர்கள் நன்கு அறிவார்கள். " ஆ பிரம்ம கீட ஜனனி" என்கிறது லலிதா சகஸ்ரநாமம்.

கோயில் கும்பாபிசேகங்களிலே அம்பிகைக்கான ஹோமகுண்டங்கள் அமைக்கும்போது யோனி வடிவில் அமைக்கும் சூட்சுமம் இது தான். பராசக்தி அதன் மூலமே வெளிப்படுகிறது. பசுவை வணங்கும்போது அதன் பின் புறத்தை வணங்குதல் என்கிற பண்பாடும் இதனாலேயே தோன்றியது.

நாம் உண்டாகி, வாழ்ந்து மறையும் இந்த பூமியே பராசக்தியின் அம்பிகையின் கர்ப்பப்பை என்பதே சாக்தத்தின் இரகசியம். ஒரு பெண்ணின் கர்ப்பத்தில் சிசு எவ்வாறு தோன்றி, குடியிருந்து, பிள்ளையாகி பேறு பெறுகிறது? கர்ப்பப்பை உயிர்

உருவாக்கத்துக்குரிய வகையில் வடிவமைக்கப்பட்டது. பிண்டமாய்க் கருவாகி, கண், மூக்கு, காது என்று உருவாகி, குழந்தை என்ற திருவாகி பூமியிலே விழுவதற்கேற்ற சகல வசதிகளுடன் அமைந்த அற்புத அமைப்பு கருப்பை!

குழந்தை வளர வளர இடவசதி ஏற்படுத்தி தரும் Elasticity.. அது. கை, கால் அசைத்து நீந்தி விளையாட வகை செய்யும் திரவச் சுரப்பு... வளர்ச்சிக்குத் தேவையான உணவை சக்தியை ஊட்டும் தொப்புள் ' கொடித் தொடர்பு... வெளியுலகக் கெடுதல்கள் உட்புகா வண்ணம் சீல் செய்யப்பட்ட பனிகுட மூடுதல்... இப்படிப்பட்ட வசதிகள் தாயின் கருப்பையில் இருப்பதால் அல்லவா குழந்தை கருவாகி உருவாகி திருவாக முடிகிறது.

இந்த ஏற்பாடுகள் அப்படியே பூமியில் இருப்பதைக் கவனியுங்கள். குழந்தையை சீல் வைத்துக் பாதுகாக்கும் பனிக்குடம் போல, கருப்பையில் உருண்டு விளையாட திரவ வசதி தரப்பட்டது போல, பூமியில் நீர் சுரப்பு உண்டாக உலகம் முழுவதும் சூழ்ந்து நிற்கும் கடல் நீர். தண்ணீர் இல்லையேல் தாவரம் இல்லை. எந்த உயிருக்கும் பூமியில் இடமில்லை. தொப்புள் கொடி தொடர்பால் சிசுவுக்கு உணவூட்டும் கருப்பை போலவே, தாவர தானியங்கள் விளைந்து, தன்னுள் வளரும் மானுட ஜாதியை இரட்சிக்கும் பூமியின் தாய்மை நிலை. இவற்றை உற்றுக் கவனித்தவர்கள் இந்தப் புவனம் அம்பிகையின் கருப்பை என்பதை உணர்வார்கள்.

இந்தப்பூமிக்கு புவனம் என்று வடமொழியில் பெயர். இந்தப் புவனத்தின் தலைவி புவனேஸ்வரி. புவனேசி! புவனா என்ற சொல்லில் இருந்து பிறந்ததே பவானி என்கிற திருநாமம். அந்தப் பவானியின் தாய்மையை கொண்டாடும் தனி விழாவே நவராத்திரி!

சிவபெருமான் வித்து. அம்பிகை பூமி. ஒரு விதையைத் தன்னுள் வாங்கி, பல நூறு விதைகளாக்கும் மாயா ஜாலம் செய்யும் பூமியைப் போல, ஒன்றை ஒன்பதாக்கும் மாயையே பராசக்தி. மூல வித்தான ஒன்றை தன் மாயா சக்தியால் ஒன்பதாக்கி - அதாவது ஒரு சிவனை பல ஜோடி சீவனாக்கி - சிவனைச் சீவனாக்கும் மகா மாயாவே மகமாயியே அம்பிகை! ஒன்றை ஒன்பதாக்குவதை விளக்கவே சிவராத்திரி ஒரு நாளும், நவராத்திரி ஒன்பது நாளும் கொண்டாடப்படுகிறது.

தந்தையின் உயிரணு தாயின் கருப்பையில் நுழைந்ததும், கருவில் உள்ள சினை முட்டை வாய் திறந்து அதனை விழுங்கி விடுகிறது. வேறெதுவும் உட்புகமுடியாதபடி சீல் வைத்த மாதிரி மூடிக்கொள்கிறது. அதுவரை ஆத்மனாக தந்தையின் விந்தில் இருந்த ஒன்று, தாயின் சினை முட்டையால் விழுங்கப் பெற்ற பின் அது சரீரம் பெற்று வளர ஆரம்பிக்கின்றது.

ஆத்மாவை, சரீரமாக அடையாளம் காட்டும் மாயா வேலை தாயின் கருப்பையில் நிகழ்கிறது. இதனால்தான் பெண்களை மாயப்பிசாசு என்றெல்லாம் வறட்டுத் துறவியர் குற்றம் சொல்கின்றனர். வடிவமற்ற, குற்றமற்ற ஆன்மா, எலும்பு, நரம்பு, இரத்தம், மாமிசம், மற்றும் மெய், வாய், கண், மூக்கு, செவி, இத்துடன் தாமஸ, ராஜஸ, சத்வ குணமுடைய மானுடப் பிறவி எய்துகிறது.

உலக வாழ்வு அந்த உயிருக்குத் தொடங்கிவிடுகிறது. இன்ப துன்பங்களை உடலாலும், மனதாலும் நுகருகிற மானுட வாழ்க்கையில் அது பந்தப்படுகிறது. எனவே உலகில் வாழவிரும்புகிறவர்கள் பராசக்தியின் கட்சி உறுப்பினர்கள். உலக வாழ்வை வெறுத்து விலகுபவர்கள் சிவபெருமான் கட்சி உறுப்பினர்கள். ஆனால் இந்தப் பிரபஞ்சமோ சிவசக்தி ஐக்கியத்தின் விளைவு. எனவே முக்திக்கு சிவன் மூல

காரணம். சக்திக்கு அம்பிகை மூல காரணம். முக்தி வேண்டுவோர் சிவவழிபாடு செய்க. சக்தி வேண்டுவோர் அம்பிகை வழிபாடு அவசியம் செய்க.

உலகவாழ்வில் பந்தப்படுத்துபவள்தான் அம்பிகை என்றால், அவள் கொடியவள் என்று கூறுவதா? கூடாது. அவள் பந்த மோகினி என்கிறது லலிதா சகஸ்ரநாமம். அம்பிகையை "பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளை" என்கிறார் மாணிக்கவாசகர். உயிர்களை எந்த அம்பிகை உடம்பில் வைத்துக் கட்டுகிறாளோ அவளே அதை அறுத்து விடுவிக்கவும் வல்லவள். அவள் கருணை இருந்தால்தான் முக்தியைப் பெறவும் முடியும். இந்திய அரசாங்கத்தில் வேலை செய்யும் ஒருவர் வெளிநாடு ஒன்றிற்கு போவதென்றால், இந்திய அரசாங்கத்தின் N.O.C (No Objection Certificate) தேவையல்லவா?

அது போல் புவனத்தில் பாவபுண்ணியங்களில் கட்டுண்ட ஆன்மா வீடுபேறு என்ற வெளியுலகம் செல்ல அம்பிகையின் N.O.C. அவசியம் தேவை.! நம்முடைய தாயார் என்பவள் பராசக்தியின் பிரதிநிதி. அதனால் சன்னியாசம் பெறுகிறவர்கள் தாயின் அனுமதி N.O.C. பெற வேண்டிய கட்டாயம் இருக்கிறது. ஆர்யாம்பாள் என்கிற தாயின் N.O.C. பெற்றுத்தான் ஆதிசங்கரர் சந்நியாசம் வாங்கினார். அந்த நன்றிக் கடனாகத்தான் சங்கர சந்நியாசிகள் சாரதாம்பாளுக்கும், காமாட்சிக்கும் பூஜை செய்கிறார்கள்.

தொட்டிலில் அசிங்கம் செய்துவிட்ட குழந்தையை அப்பா எடுப்பதில்லை. கர்ப்பத்தில் இருந்து கசடுகளோடு வெளிப்பட்ட குழந்தையை அப்பாவிடம் கொடுப்பதில்லை. குழந்தையின் மலத்தை (அழுக்கை) அம்மா சுத்தம் செய்து பளிச்சென்று பவுடர் போட்டு அப்பாவிடம் தருகிறாள். ஆன்மாக்களின் மூன்று மலங்களான ஆணவமலம், கன்மமலம், மாயாமலம் என்கிற அழுக்குகளை நீக்கி, பவுடர் போடுகிறமாதிரி விபூதி பூசவைத்து, சிவபெருமான் என்கிற அப்பாவிடம் தருகிற அம்மாதான் பராசக்தி. அதனால்தான் லலிதா சகஸ்ரநாமத்தின் முதல் நாமம் "ஸ்ரீமாதா".

*(ஆன்மீகச் சொற்பொழிவுகளில் கிருபானந்த வாரியாருக்கு வாரிசாகப் போற்றப்படும் திரு. சு.கி. சிவம் அவர்களது "மனசே! நீ ஒரு மந்திரச் சாவி" என்ற ஆனந்த விகடன் பிரசுரத்திலிருந்து மேற்காணும் கட்டுரை இங்கு இடம் பெறுகிறது.)*

# ''இறைவன்''

ஆக்கம் - வ. இராசையா

விண்வெளி ஆய்வு இன்று வெகு துரிதமாக வளர்ந்து வருகிறது. அண்டவெளியினது பிரம்மாண்டத்தைக் கண்டு விஞ்ஞானம் வியக்கிறது. விஞ்ஞானிகள் திகைக்கிறார்கள்! இந்தப் பிரபஞ்சத்திற்கு மூலமான இறைவன் என்னும் மாபெரும் சக்தியின்மேல் அவர்களுக்குள்ள நம்பிக்கை மேலும் மேலும் வலுக்கிறது.

பிரபஞ்சத்திற்கு ஆதி எது, அந்தம் எது என்பன இன்னும் காணப்படவில்லை. ஆயினும், இதற்கு மூலமாக உள்ள பொருள் எது என்பது மெஞ்ஞானிகளால் முன்பே உணர்ந்து உரைக்கப்பட்டு விட்டது.

உலகு ஆதிபகவனை - இறைவனை முதலாக உடையது என்கிறார் திருவள்ளுவர். திருக்குறளில் முதலாவது அதிகாரத்திலே, முதற் குறளிலே அவர் கூறுவது இது ''மனிதா! உனக்கும் மேலான ஒரு சக்தி இருக்கிறது: நீயும் ஏனைய சராசரங்களும் தோன்றுவதற்கு மூலமான தோற்றுவாயான ஒரு மாபெரும் சக்தி இருக்கிறது: அதுவே கடவுள். அதை நம்பு'' என்கிறார். ஒரு சக்தி இருக்கிறது என்பதை முதலில் நம்பினால்தானே அதன் இயல்புகளை நோக்கலாம். அதனை வாழ்த்தலாம்! திருவள்ளுவர் சொல்கிறார்.

''அகரமுதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு''

அகரம் என்னும் எழுத்தினது இயல்புகளை அறிந்து கொள்வதன் மூலம் இறைவனது இயல்புகளை உணர்ந்து கொள்ளலாம். தமிழ், ஆரியம், கிரேக்கம் முதலிய பல மொழிகளிலே அகர ஒலியே முதல் எழுத்து. தலைமையான எழுத்து. மொழியிலே அகரத்திற்கு முதன்மை பல வழிகளிலே உண்டாகிறது.

அகரத்திற்கு அதன் பிறப்பினால் முதன்மை இருக்கின்றது. உதடுகளைச் சற்றே விரித்து ஒலியை வெளியே விட்டால் போதும்: வேறு முயற்சி எதுவும் வேண்டாது அகர ஒலி தோன்றிவிடும். மற்றைய எழுத்துக்கள் இவ்வாறு திரிபு இன்றித் தோன்றுவது இல்லை. அகரம் இயற்கையாக வெளிப்படும் ஒலி. இயல்பாகவே உள்ள ஒலி. இங்ஙனம் தன் இயல்பாக இருக்கின்ற தன்மை இறைவனுக்கு உரியது. அவர் தன்னியல்பாகவே உள்ளவர்!

அகரம் ஒரு மூல ஒலி: தனி ஒலி! மற்றைய எழுத்துக்கள் தனி ஒலிகள் அல்ல. இவ்வாறே இறைவனும் மூலப் பொருளாக உள்ளவர். அவர் சுயம்பு!

மேலும், அகரத்தைக் கொண்டுதான் மற்றைய எழுத்துக்கள் எல்லாம் தோன்றுகின்றன. இவ்வகையில் அகரம் ஏனைய எழுத்துக்களுக்கு தலைமை எழுத்தாக விளங்குகிறது. பிரபஞ்சம் இறைவனை முதலாகக் கொண்டு விரிகின்றது. ஆகவே, பிரபஞ்சத்திற்கு இறைவனே ஏகத் தலைவன்.

வாயின் உதடுகள் திறந்ததும் முதலில் பிறக்கின்ற எழுத்தொலி அகரம். மற்றைய எழுத்தொலிகள் எல்லாம் இந்த ஒலியை அடியொற்றித்தான் எழுகின்றன. எழுத்தொலிப் பிறப்பில் வாய் திறத்தல் இருக்கும்போது அவ்வெழுத்துக்களில் அகர ஒலியும்

சேர்ந்துவிடல் நிகழும். அதாவது மற்றைய எழுத்தொலிகளிலும் அகர ஒலி நுண்ணளவேனும் கலந்திருக்கிறது. இது போலவே, பிரபஞ்சத்தின் முதல்வனாகிய இறைவன் அதன் ஒவ்வோர் அணுவிலும் உறைகிறான், பழத்திலே சுவை இருப்பது போல.

மொழிக்கு முதல் எழுத்து அகரம். ஆகவே, மொழியைக் கற்கும்போது அகரத்தை முதலில் படித்தல் வேண்டும். இவ்வாறே உலகை அறிய வேண்டுமானால் முதலில் இறைவனை அறிந்து கொள்ளல் வேண்டும். உலகுக்கு முதல்வன் அவன் அல்லவா!

அகர முதல எழுத்தெல்லாம் என்னும் உவமை இவ்வாறெல்லாம் விரிந்து இறைவனது இயல்புகளை உணர்த்துகிறது. இந்த உவமை உணர்த்தும் இறைஇயல்புகள் இதற்கு மேலும் விரியும்.

திருவள்ளுவர், "உலகுக்கு ஆதிபகவனே முதல்வன்! ஆதிபகவன் முதற்றே உலகு!" என்று உறுதிபடக் கூறுகின்றார்! அதாவது "கடவுள் உண்டு" என்று அழுத்திக்கூறுகின்றார்! "முதற்றே" என்னும் இந்த அழுத்தம் நாத்திகத்திற்கு விழுந்த அடி!

(இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத் தமிழ்ச் சேவையில் இளைஞர் மன்றம் நிகழ்ச்சியில் 'வானொலி அண்ணாவாக', சிறுவர் மலர் நிகழ்ச்சியில் 'வானொலி மாமாவாக' புகழ் பெற்றவரும், யாழ் இலக்கியப் பேரவையின் பரிசு, வடகீழ் மாகாண அரசின் பரிசு, இலங்கை அரசின் இலக்கிய விருதுகள் பெற்றவருமான இளைப்பாறிய ஆசிரியர் திரு. வ.இராசையா அவர்களின் "குறள் வழி வாழ்வு" என்ற நூலில் இருந்து கட்டுரைகள் "துர்க்கா மஞ்சரி"யை தொடர்ந்து அலங்கரிக்கும்.)

---

உங்கள் குடும்ப நிகழ்வுகள் எதுவானாலும்
குதாகலத்துடன் கொண்டாட

அழகிய மணவறை, விசாலமான பந்தல்,
கதிரைகள்

நியாயமான கட்டணத்தில்
வாடகைக்குப் பெற்றுக்கொள்ளலாம்.

விபரங்களுக்கு அழையுங்கள்:

அருள்மிகு துர்க்காதேவி இந்து தேவஸ்தானம்
தொலைபேசி: (604) 521-3472

## சிறுவர் பகுதி

# "கந்தபுராண அமுதம்"

- மாதாஜி

ஞான வீர வெற்றிவேல்!

முருகப் பெருமானிடம் சிவபெருமான் பிரணவப்பொருள் உபதேசம் கேட்ட செய்தியை அகத்தியர் அறிந்தார். தாமும் முருகப் பெருமானிடம் பிரணவப் பொருளை உபதேசம் பெற விரும்பினார். இதனால் கந்தக் கோட்டம் வந்தார். வீரவாகு தேவரிடம் அனுமதி பெற்று கந்தக் கோட்டம் கோயிலின் உள்ளே சென்றார். அங்கு முருகப் பெருமான் வீற்றிருந்தார். முருகனை வலம் வந்து வணங்கினார்.

எம்பெருமானே காமனால் வருந்துகிறேன். காலனைக் கண்டு பயப்படுகிறேன். காலனைக் காலால் உதைத்தவர் உமது தந்தை. அவருக்கே பிரணவப்பொருள் உபதேசம் செய்தீர். எனக்கும் பிரணவப் பொருள் உபதேசம் செய்தருள வேண்டும் என்று அன்பாய் உருகி நின்றார்.

அகத்தியரின் அன்பான வேண்டுகோளுக்கு இணங்கினார் முருகப் பெருமான். இதனால் பிரணவப் பொருளையும், வேதாகமப் பொருளையும் உலகின் ஆன்மாக்கள் உய்யும் பொருட்டு அகத்தியருக்கு முருகப் பெருமான் உபதேசம் செய்தருளினார்.

முருகப் பெருமான் கந்தக் கோட்ட வெற்பில் இருந்த காலத்தில் திருமாலும் உடன் இருந்தார். அப்போது திருமாலின் இருகண்களில் இருந்தும் ஆனந்தக் கண்ணீர் வடிந்தன. சிவபெருமானின் கண்களில் இருந்து எழுந்த ஞானாக்கினி தானே ஞானபண்டிதன் மாமுருகன்.

திருமாலின் கண்களிலிருந்து வடிந்த ஆனந்தக் கண்ணீரானது இரு பெண்களாகின. அவர்கள் முருகப் பெருமானைக் காதலித்தார்கள். முருகப் பெருமான் வேறுயாருமல்ல, அத்தை மகன்தானே.

முருகப் பெருமானைத் திருமணம் புரிய வேண்டுமென அவ்விரு கன்னியரும் நீண்டகாலம் தவம் செய்தார்கள். அப்போது முருகப் பெருமான் தரிசனம் அளித்தார். அப்பெண்கள், முருகப் பெருமானின் பொன்னடிகளில் வீழ்ந்து வணங்கி நாணி நின்றார்கள்.

அப்போது முருகன் அவர்களை என்ன வேண்டுமெனக் கேட்டபோது, அவர்கள் முருகனை அடைய இருக்கும் விருப்பத்தைக் கூறினார்கள். உடனும் முருகப் பெருமான் அவர்களைத் திருமணம் செய்ய விரும்பவில்லை. சூரசங்காரம் முடிந்தபின் திருமணம் செய்வதாக வாக்களித்தார்.

காரணம் என்னவென்றால் இறைவன் சக்தியோடு இருக்கும்போது அழித்தல் தொழில் செய்ய முடியாது. சிவபெருமான் மலைமகள் பார்வதியைத் திருமணம் செய்ய முன்புதான் காமனை எரித்தார். இராமரும் சீதையைப் பிரிந்த பின்புதான் இராவணனைச் சங்காரம் செய்தார்.

முருகப் பெருமான், வேதவல்லியை இந்திரன் மகளாகவும், சுந்தரவல்லியைப் பூமியில் குறவர் குடியில் சென்று வளரும் படியும் பணித்தார். அவ்வாறே அவ்விரு கன்னியரும்

தேவகுஞ்சரி தெய்வயானையாகவும் வள்ளியாகவும் அவதாரம் செய்து, முருகப் பெருமானை நினைந்து தவம் செய்து வந்தனர்.

சிவபெருமான் தேவர்களின் குறைகளைத் தீர்க்க திருவுளம் கொண்டார். இதனால் தமது பக்கத்தில் இருந்த குமரக் கடவுளை நோக்கி அசுரர்களைச் சங்காரம் செய்ய வேண்டிய காலம் நெருங்கிவிட்டதைக் கூறினார். முருகக் கடவுளும் மற்றைய நவ வீரர்கள் இலட்ச வீரர்களும் ஆயத்தமானார்கள்.

பின்னர் சிவபெருமான் பதினொரு உருத்திர வீரர்களையும் முருகப் பெருமானுக்கு ஆயுதப் படைகளாக இருக்கும்படி பணித்தார். அவ்வாறே உருத்திர வீரர்களும் பதினொரு ஆயுதங்களாக மாறினார்கள். பின்னர் சிவபெருமான் வேல் ஒன்றினையும் படைத்தார்.

இவ்"வேல்" படை மற்றைய ஆயதங்களைவிட மிக மிகச் சிறப்பானது. அதனை எதிரிகளிடையே ஏவினால் இமைப் பொழுதில் எதிரிகளை அழித்துவிட்டு மீளும் தன்மையுடையது. இவ்வேலை எதுவும் வெல்ல முடியாமையினால் ஞானவேல் என்றும் ஞானசக்தி என்றும் நாமங்கள் உண்டு. மிக ஆழமானதும், மிக அகலமானதும், மிக மிகக் கூர்மையானதுமான இந்த ஞானசக்தி வேல் அசுரரை அழித்து அமரரைக் காத்த கதைகளைப் பின்னர் படிப்போம்.

## தன்னைத் தானே அறிய

தன்னைத்தானே யாரென்று பூரணமாக அறிந்து கொள்வதை, அத்யாத்ம வித்தை என்று சாத்திரங்கள் கூறுகின்றன. உலகிலுள்ள எல்லா விசயங்களையும் தெரிந்து கொண்ட ஒருவன், தன்னைப் பற்றிச் சரியாகத் தெரிந்து கொள்ளாவிட்டால் அவனால் என்ன பயன்?.

"ஒருவன் உபன்யாஸங்கள் செய்யலாம். பலருக்கு நல்ல விஷயங்களை எடுத்துச் சொல்லலாம். கூட்டத்தில் எல்லோரும் பாராட்டும்படி பேசலாம். சாத்திரங்களை விளக்கலாம் அவற்றைப்பற்றி எழுதலாம். இதனால் அவனுக்குப் பெயரும் புகழும் உண்டாகலாம். பணமும் கிடைக்கலாம். ஆனால், இதனால் மட்டுமே அவன் ஆத்மா பற்றுகளிலிருந்து விடுபட்டு பரமாத்மாவை அடைந்துவிட முடியாது. அவன் தன்னைப்பற்றி சிந்தனை செய்து, தான் யார் என்பதை தன் விவேகத்தாலும், சாதனைகளாலும் நன்கு உணர்ந்த பின்புதான், அவன் இறைவனை நெருங்கும் நிலையை அடைகிறான்" என்று ஆதிசங்கர பகவத் பாதாள் கூறியுள்ளார்கள்.

நமது முந்தைய ஜகத்குரு ஸ்ரீஸ்ரீ சந்திரசேகர பாரதி மஹாஸ்வாமிகள் வரலாற்றிலிருந்து ஒரு சிறு சம்பவத்தை குறிப்பிட விரும்புகிறேன். அவர்கள் அடிக்கடி வெளியில் வராமல், தவத்திலும், பூஜை புனஸ்காரங்களிலும் தனிமையில் தியானம் செய்வதிலும் பெரும்பாலான நேரத்தை கழித்து வந்தார்கள். சிருங்கேரிக்கு வரும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் பல சமயங்களில் அவர்களைத் தரிசித்து அவர்களோடு பேசிச் செல்லும்

வாய்ப்பைப் பெற முடியாமல் போயிற்று. ஒரு நாள் தியான நிலை கலைந்து வந்த ஆசாரியர்களிடம், ஸ்ரீ மடத்தின் தர்மாதிகாரி சென்றார்.

"தாங்கள் பல நாட்கள் தவத்திலும், தியானத்திலும் ஈடுபட்டுத் தனிமையில் அமர்ந்துவிடுகிறீகள். அதனால் இங்கு வரும் பக்தர்கள் தங்களைக் கண்டு பேச முடியாமல் போய்விடுகிறார்கள். நீங்கள் பக்தர்களை விசாரித்து அவர்கள் குறைகளைக் கேட்டு, அருள்பாலித்தால் நலமாயிருக்கும்" என்றார்.

அதற்கு ஜகத்குரு அவர்கள் "முதலில் நான் யார்? என்று சரியாக முதலில் நான் தெரிந்துகொள்ள வேண்டும். அதன் பின்பு தான் மற்றவர்களைப் பற்றி விசாரிக்கத் தகுதி ஏற்படும்" என்றார்.

எத்தகைய உயர்ந்த தவம். எனவே ஒவ்வொருவரும் முதலில் தனியே அமர்ந்து, தன்னைப் பற்றிப பூரணமாகத் தெரிந்து கொள்ள முயல வேண்டும். தன்னைத்தானே அறிந்து கொண்ட பின்புதான் தெய்வத்தை நாம் அறிய முடியும்.

நம்மை நாம் அறிந்து கொள்ள, "நாம் யார்?" என்பதைப் புரிந்துகொள்ள, சரியான வழி முறை, ஆன்மீக, தெய்வீக பயிற்சி,சாதனை ஆகியவை. இந்த ஆத்மவித்யா அல்லது சுயப் பரீட்சை நடத்தத் தேவையான வழிமுறைகளை சற்குருவிடமிருந்தும், சாஸ்திரங்ளிலிருந்தும், தெரிந்துகொள்ள வேண்டும்.

நன்றி : ஞான பூமி

## வேறுபட்ட பார்வை மாறுபட்ட உணர்ச்சி

அழகான ரோஜாச் செடி. பரபரப்பாக பறிக்கப் போனவன் கையில் கூரிய முள் ஒரு குத்துக் குத்தியது. ஆழகான ரோஜாப்பூ பூக்கும் செடியில் கடினமான முள்வைத்த கடவுள் முட்டாள் என்பது அவன் முடிவு. அதையே ஒரு ஞானி பார்த்தார். "ஆஹா..... கடவுள் கருணையே கருணை! இந்த ரோஜாச் செடி வெறும் முட்செடியாக இருந்திருந்தால் யாராவது இதை வளர்ப்பார்களா ? நேசிப்பார்களா ? நீர் விடுவார்களா? இந்த ரோஜா செடியை எல்லோரும் வெறுப்பார்களே. இடை இடையே ரோஜவை சிரிக்க விட்டு; இந்த செடிக்கும் ஒரு மரியாதை ஏற்படுத்திய கடவுள் 'மகா ஞானி' என்று முணுமுணுத்தார்.

உலகமே நாம் எப்படிப் பார்க்கிறோமோ, அப்படியே தெரிவதால்தான் உலகத்தையே 'பார்' என்று தமிழர் கூறினர் போலும்!

கார் வைத்திருந்த ஒருவர், விற்றபின் பஸ்ஸில் போக நேர்ந்தால் இதுவும் ஓர் அனுபவம் என்று எடுத்துக் கொண்டால் சிக்கல் இல்லை, "எப்படி எப்படி எல்லாம் வசதியாக இருந்தேன், இப்போது இப்படியாகி விட்டதே" என்று ஒப்பிட்டு புலம்பினால் கஷ்டம் இன்னும் பெரிதாக தெரியும். கந்தபுராணத்தில் இருந்து கருத்து புலப்படுகிறது.

சூரபன்மன் மகன் பானுகோபன். தேவலோகத்தை எரித்து, இந்திரன் மகன் ஜயந்தனைச் சிறைபிடித்தான். சிறையில் அவன் கைகள் கட்டப்பட்டன. பிறகு வெட்டப்பட்டன. துடித்தான். சாகவும் முடியவில்லை. அமிர்தம் உண்டதால் துடித்த கைகள் மீண்டும் சேர்ந்தன. ஜயந்தன் இந்தத் துன்பத்தை ஓர் அனுபவம் என்று ஏற்கவில்லை. இந்திரன்

மகனாகச் சுகபோகமாக வாழ்ந்ததை இப்போது நினைத்து....அப்படிப்பட்ட தனக்கா இந்தக் கதி என்று ஒப்பிட்டு அழுதான்.

துன்பத்தின் முடிவில் சிவபெருமானைத் தொழுது ஆறுதல் அடைந்தான் ஜயந்தன். அதை ஏன் முன்கூட்டியே செய்திருக்கக் கூடாது. அந்த நல்லறிவு அவனுக்கு இல்லை. அது இராமபிரானிடம் இருந்ததாகக் கம்பன் படைக்கிறான். எப்படி?

தசரதர் இராமனை அழைத்து " நாளை உனக்கு அரச பதவி" என்றார். மகிழவும் இல்லை வெறுக்கவும் இல்லை. அரண்மனை உத்தரவை அந்தப்புரம் ரத்துச் செய்தது அந்தக்காலத்திலேயே அந்தப்புரம் அரண்மனை முடிவுகளை மாற்றி இருக்கிறது.! பதின்னான்கு வருட வனவாசம் இடியாக வந்திறங்கியது. இராமன் துடிக்கவில்லை. கையேயி ஒழிக என்று அரண்மனைச் சுவர்களை அசிங்கப்படுத்த ஆட்களை ஏவவில்லை "சித்திரத்தின் அலர்ந்த செந்தாமரை" யாக இருக்கிறான் ராமன்.

இராமன் இன்பத்துக்கு இன்பப்படாத துன்பத்திற்கு துன்பப்படாத ஞானி என்பதை ஓவியத்தில் வரைந்த, தாமரையாக விளங்கும் இராமன் முகம் விளக்கும். தாமரை என்று எழுதாமல் ஓவியத்தில் வரைந்த தாமரை என்று எழுதி, கம்பன் ஆழமான உண்மையை அழகாக விளக்கினான்.

தாமரை மலரும் வாடும். மீண்டும் மலரும், வாடும். ஆனால் ஓவியத்தில் வரைந்த தாமரை மலராது வாடாது. என்றும் ஒன்று போல அழகு காட்டும். அதனால் தான் இன்ப துன்பங்களால் பாதிக்கப்படாத இராமனுடைய நல்லறிவை ஓவியத்தாமரை போன்ற முகம் என்று எழுதினான் கம்பன்.

இராச்சியத்தை இழந்தபோதுகூட இராமன் வருந்தவில்லை. துன்பத்தை துன்பமாக நினைக்காத துணிவு அவன் சொத்து. நாற்காலிகள் நம்மை விடக் கீழானவை. நாற்காலியை தூக்கிக் கொண்டு நிற்க முடியாது அதன் மேல்தான் நாம் உட்கார வேண்டும். பதவிகளைத் தம்மை விடப் பெரிதாக நினைப்பவர்கள்தான் பதவிகளை இழக்கும்போது பதறுகிறார்கள்.

'காட்டுக்குப் போ' என்கிற கைகேயி "புழுதி படிந்த கொடிய காட்டுக்குப் போ" என்ற பொருளில் " பூமிவெங் கானம்" என்கிறாள். இராமனோ 'மின்னுகிற ஒளி பொருந்திய காட்டிற்கு போகிறேன்' என்ற பொருளின் "மின் ஒளிர் கானம்" என்றான். கொடுமை காட்டிலே இல்லை. கைகேயி மனத்திலே இருக்கிறது. ஒளியும் காட்டிலே இல்லை இராமன் மனத்திலே இருக்கிறது. இராமன் வனவாசத்தை ஒரு புதிய அனுபவமாக வரித்துக் கொண்டானே ஒழிய அரண்மனை வாழ்வோடு ஒப்பிட்டு அழுது துடிக்கவில்லை.

ஆனால் துரியோதனன்.... அப்படியா? தன் செல்வத்தைத் தருமனடைய, செல்வத்தைத் தருமனுடைய செல்வத்தோடு ஒப்பிட்டுப் பார்த்துத் தரித்திரனாகிப் புலம்பித் துடிக்கிறான். பாஞ்சாலி சபதத்தில் பாரதி பாடுகிறார்.

" ஏழையாகி இரங்குதல் உற்றான்."
துரியோதனன் எப்போது ஏழையானான்?

தருமனுடைய செல்வத்தோடு ஒப்பிட்டால், தான் ஒரு பஞ்சை பராரி என்பது துரியோதனன் நினைப்பு. அதனால் பொறாமையில் புலம்பியவன் ஏழையாகி அழுகிறான் என்றான் பாரதி.

இதற்கு எதிராகக் குமரகுருபரர் என்ற ஞானி, செல்வம் என்பது என்ன? என்ற கேள்விக்கு, செல்வம் என்பது சிந்தனையின் நிறைவு என்கிறார். துரியோதனன் தரித்திரன் அல்லன். தரித்திர உணர்வு அவனைத் தாக்கி விட்டது.

கோயில் பூசை செய்யும் ஏழைப் பிராமணர் மகளான ஆண்டாள் மனத்தால் பணக்காரி. எப்படி? திருமால் இருஞ்சோலை நம்பிக்கு நூறு அண்டா நிறைய நெய், நூறு அண்டா நிறைய அக்கார அடிசில் படைக்கிறாள் தன் பாசுரத்தில். ஏப்படி? அவள் மனத்தில் வறுமை இல்லை. தரித்திர புத்தி எப்படி வரும்? திருமாலின் தேவியல்லவா அவள்!.

தரித்திரம் வேறு.... தரித்திர புத்தி வேறு. சிலர் பேர் வெற்றிலைப் பெட்டியைத் திறந்ததும் நல்லதாய் நாலு எடுத்துப்போட மாட்டார்கள். வாடியதைத் தேடியெடுத்து 'வீணாகிப் போகிறதே' என்று தின்று வைப்பார்கள். அடுத்த நாளும் வாடல்... தேடல்... ஒருநாள் வாடலை எறிந்து விட்டால் தினமும் புதிய தளிர் கிடைக்கும். இவர்களுக்கு தரித்திரம் இல்லை. தரித்திர புத்தி இருக்கிறது. "காலுக்குச் செருப்பில்லை என்று கவலைப்பட்டேன், காலே இல்லாதவனைப் பார்க்கும் வரை" என்பது ஒரு பொன்மொழி. பொருளாதார விசயத்தில் நம்மை விடக் குறைந்தவர்களோடு ஒப்பிட்டுத் திருப்தி அடைய வேண்டும். அறம் சம்பந்தப்பட்ட விசயத்தில் உயர்ந்தவரோடு ஒப்பிட்டு நாமும் நம்மை உயர்த்த வேண்டும். நாம் நேர்மாறாகச் செய்கிறோம்.

"குடிப்பது தவறல்லவா?" என்று கேட்டால் "குடித்து விட்டு, தெருவில் உருளுகிற பலரை விட நாம் மேல்" என்று அற்பவிசயத்தில் தாழ்ந்தவரோடு ஒப்பிட்டுத் திருப்தியடைகிறார்கள்.

அற விசயத்தில் உயர்ந்வருடன் ஒப்பிட வேண்டும் பொருள் விசயத்தில் தாழந்தவரோடு ஒப்பிட வேண்டும். இன்ப விசயத்தில்... மிக முக்கியம்... சமமான ஒருவரோடுதான் ஒப்பிட வோண்டும்.

**நன்றி: சுகி சிவம் ( ஞான மலர்கள்)**

## சங்கடங்களைத் தீர்க்கும் சங்கடஹர சதுர்த்தி..

விநாயகப் பெருமானை வழிபடுவதற்கு பல விரதங்கள் இருந்தாலும் விரதத்தில் மிகச் சிறந்ததும் பழமையானதும் சங்கடங்கள் அனைத்தும் தீர்க்கக் கூடிய சங்கடஹர சதுர்த்தியில் விரதம் இருந்தால் அளவு கடந்த ஆனந்தத்தை அடையலாம்.சகல சௌபாக்கியங்களையும் பெறலாம்.
ஒவ்வொரு மாதமும் வரும் சங்கடஹர சதுர்த்தியில் விரதம் இருந்தால் குடும்பத்தில் சுபீட்சமும் தடைகள் இன்றி எல்லாக்காரியமும் நடைபெறும்.

ஹர என்ற சொல்லுக்கு அழித்தல் என்று பொருள் பொருள்.ஒவ்வொரு மாதமும் பௌர்ணமிக்கு அடுத்து வருகிற சதுர்த்தி திதியே சங்கடஹர சதுர்த்தி ஆகும். அதாவது கிருஷ்ணபட்ஷத்தில் வரும் சதுர்த்தியாகும். ஆவணி மாதத்தில் வருகின்ற தேய்பிறையில் இவ்விரத்தத்தை கடைபிடிக்கத் தொடங்க வேண்டும். செவ்வாய்க் கிழமைகளில் வரும் சங்கடஹர சதுர்த்தி மிகச் சிறப்பு வாய்ந்தது. இதை மகா சங்கடஹர சதுர்த்தி என்று அழைப்பர்.

பழமையான விரதம்..

ஒரு சமயம் பார்வதி தேவி பரமனை அடைவதற்கு கடும் தவம் செய்தும் பரமன் கண்டுகொள்ளவில்லை. தேவி விநாயகப் பெருமானை அணுகி தனது கவலையைத் தெரிவித்தார். விநாயகப் பெருமான் விரதங்களில் பழைமையானதும் சங்கடங்களைத் தீர்ப்பதுமான சங்கடஹர சதுர்த்தியைக் கடைப்பிடிக்கச் சொன்னார். அதன் படியே தேவி இவ்விரதத்தை கடைப்பிடித்து பலனடைந்ததாக புராணங்கள் கூறுகின்றன.

விரதத்தின் பலன்.. .. ..

இவ்விரதத்தை கடைப்பிடிப்பதால் நீண்ட நாட்கள் தீராமல் இருந்த நோய் தீரும். வாழ்க்கையில் தொடர்ந்து பலவகை இன்னல்களுக்கு உள்ளானவர்கள் நிலையான சந்தோஷத்தை அடைய முடியும். மிகச் சிறப்பான கல்வி அறிவு புத்திக் கூர்மை நீண்ட ஆயுள் நிலையான செல்வம் நன்மக்கட் பேறு என பல வகை நன்மைகளை அடையமுடியும். சனி தோஷத்திற்கு உள்ளாகிறவர்கள் இவ் விரதத்தை அனுஷ்டித்தால் சனியின் தாக்கம் அதிகமாகக் குறையும்... .. நீங்களும் இவ் விரதத்தை அனுஷ்டித்து பலன் பெறுவீர்களாக.. .. ..

ஆன்மீகத் தொகுப்பிலிருந்து.. .. ..

ஷாளினி கிருபாகரன்.

## பிரதோஷ வழிபாடு.... கடைப்பிடிக்கவேண்டிய முறைகள்

சிவபெருமானை சாதாரணமாக எல்லா நாட்களிலும் வணங்கி வழிபாடு செய்யலாம். இருப்பினும், சிவபெருமானுக்கு மிகவும் உகந்ததாகக் கருதப்படும் பிரதோஷ நாளில் வழிபடுவது என்பது சிறப்புத் தன்மை வாய்ந்ததாகும். எனவே, இந்நாளில் கடைபிடிக்க வேண்டிய வழிபாட்டு முறைகள்

முற்பிறப்பு தோஷங்களை நீக்குவதற்குரிய காலம் பிரதோஷ காலமாகும். அன்றைய தினம் சிவபெருமானைக் குறித்து விரதம் இருந்து பிரதோஷ வேளையில் (மாலை) சிவாலயம் சென்று சிவபொருமானுக்கு அபிஷேக, ஆராதனைகள் செய்து அவருடைய பஞ்சாட்சர மந்திரத்தைச் சொல்லி வழிபட்டால் பல கோடி நன்மைகள் தானாகவே வந்து சேரும். அப்படி வழிபடுவோர் துன்பங்களினின்றும் நீங்கி இன்பம் எய்துவர் என்பது ஐதீகம்.

பொதுவாக நாம் எத்தனை தோஷங்களுடன் ஜென்மம் எடுத்துள்ளோம் என்பது யாருக்கும் தெரியாது. ஆனால் பிரதோஷ விரதத்தால் அத்தனை தோஷங்களையும் போக்கிட முடியும். கலியுகத்தில் நம்மைப் பற்றியுள்ள சகல தோஷமும் நிவாரணமாகி சகல சௌபாக்கியமும் தரும் விரதம் பிரதோஷ விரதம்.

இந்த மானிடப் பிறவி எடுத்த பயன் வீணாகாமல் இருப்பதற்கு இப்பிரதோஷ வழிபாட்டின்போது கடைபிடிக்க வேண்டிய முக்கிய விதிமுறைகளை பற்றி தெரிந்து கொள்வோம்.

1. பிரம்ம முகூர்த்த வேளையில் (அதிகாலை) விழித்தெழ வேண்டும்.

2. நன்னீராடி, மடியுடுத்திக் கொள்ள வேண்டும்.

3. நெற்றியில் திருநீறு, சந்தனம், குங்குமம் தரித்துக் கொள்ள வேண்டும்.

4. கழுத்தில் ருத்திராட்ச மணி மாலை அணிந்து கொள்ள வேண்டும்.

5. பிரதோஷ நாளில் முழு உபவாசம் இருப்பது நலம்.

6. அன்றைய தினம் சிவபுராணம், சிவநாமாவளிகள், சிவ ஸ்தோத்திரங்கள் படிப்பது நன்மை தரும்.

7. பொதுவில் சிவ சிந்தனையோடு இருப்பது உசிதம்.

8. மாலையில் மீண்டும் நீராடி, மடியுடுத்தி, சிவ சின்னங்கள் தரித்துக் கொள்ள வேண்டும்.

9. தம் இல்லத்தில் நந்தி தேவருடன் கூடிய சிவலிங்கம் இருக்குமாயின் அவற்றிற்கு அபிஷேகம் செய்து, வில்வ இலைகளால் அர்ச்சனை செய்து வழிபாடு செய்யலாம்.

10. அவ்வாறு இல்லையாயின் மாலையில் பிரதோஷ வேளையில் ஏதேனும் சிவாலயத்திற்குச் செல்ல வேண்டும்.

11. சிவலிங்கப் பெருமானுக்கும், நந்தி தேவருக்கும் நடத்தப்படும் அபிஷேக, ஆராதனைகளைக் கண்டுகளிக்க வேண்டும்.

12. நந்தி தேவருக்கு அருகம்புல் மாலை அல்லது கரும்புத் துண்டுகளால் ஆன மாலையை அணிவித்தல் வேண்டும்.

13. மாவினால் அகல் விளக்கு அமைத்து, அதில் பசு நெய்விட்டு பஞ்சு திரிபோட்டு விளக்கு ஏற்ற வேண்டும்.

14. அரிசியில் வெல்லம் இட்டு பிசைந்து நந்தி தேவருக்கு நிவேதனமாகப் படைக்க வேண்டும்.

15. பின்னர் அப்பிரதட்சணமாக (சுவாமிக்கு இடதுபுறம்) ஆலயத்தை வலம் வந்து நந்திதேவரின் இருகொம்புகளின் வழியாக, எல்லாம் வல்ல ஈசுவரனாகிய சிவலிங்கப் பெருமானைத் தரிசிக்க வேண்டும்.

16. சிவலிங்கத்திற்குத் தீபாராதனை முடிந்த பின்னர் நந்திதேவரின் காதருகில் நின்று மற்றவருக்குக் கேட்காத வகையில் நம் குறை விலகி, நிம்மதி பெற வேண்டிக் கொள்ள வேண்டும். இவ்வாறு பன்னிரண்டு பிரதோஷ நாட்களில் கூறி வந்தால் பலன் கிடைக்கும் என்பது உண்மை.

17. "ஹர ஹர மகாதேவா! சாம்ப சதாசிவா!
உலக நலனுக்காக விடம் உண்ட கண்டனே!
ஏகாம்பரனே! எங்கள் இடர் களைந்து,
வாழ்வில் இன்பம் ஊட்டிக் காப்பாயாக!" – என்று வேண்டிக் கொள்ள வேண்டும்.

18. பின்னர் வீடு திரும்பியதும் ஒருவருக்கேனும் அன்னமிட்டு, பின்னர் தாமும் உண்டு விரதத்தை நிறைவு செய்ய வேண்டும்.

## பிறவிப்பயனை அருளும் பிரதோஷம்

1. பிரதோஷம் என்றால் என்ன ?

நம் முற்பிறப்பு தோஷங்களை நீக்குவதற்குரிய காலம். சிவபெருமானுக்கு உகந்த உபாசனா காலமான ஒவ்வொரு பக்ஷத்திலும் (வளர்பிறை, தேய்பிறை, இரண்டிலும்) வருகின்ற திரயோதசி திதியன்று சூரிய அஸ்தமனத்திற்கு முன் மூன்றேமுக்கால் நாழிகையுமாய் உள்ள காலமே பிரதோஷம் எனப்படும். அன்றைய தினம் சிவபெருமானைக் குறித்து விரதம் இருந்து பிரதோஷ வேளையில் சிவாலயம் சென்று சிவபொருமானுக்கு அபிஷேக ஆராதனைகள் செய்து அவருடைய பஞ்சாட்சர மந்திரத்தைச் சொல்லி அவரை வழிபட்டால் பல கோடி நன்மைகள் தானாகவே வந்து அடையும். துன்பங்களினின்றும் நீங்கி இன்பம் எய்துவர். எனவே பிரதோஷம் ரஜனீ முகவேளை பாபத்தைப் போக்கும் நேரம் எனப்படும்.

2. பிரதோஷ வேளைப் பெருமைக்கு உரிய காரணம் யாது ?

ஆன்மாக்கள் உய்யும் பொருட்டு சிவபிரான் திருப்பாற் கடலில் தோன்றிய ஆலால விஷத்தை உண்டு கண்டத்தில் தாங்கி அருளினார். அதனால் மால் அயனாதி தேவர்கள் தங்களுக்கு நேர்ந்த கண்டத்தில் (தோஷத்தில்) இருந்து தப்பினார்கள். இது நிகழ்ந்தது ஏகாதசி மாலை வேளை. மறுநாள் துவாதசியன்று தோன்றிய அமிர்தத்தை உண்டு மகிழ்ந்த தேவர்கள் அதற்கு மறுநாள் திரயோதசி அன்று சிவபெருமானைப் பணிந்து போற்றித் துதித்துப் பிரார்த்தித்தார்கள். அன்று சூரிய அஸ்தமனத்துக்கு முன்பாக மூன்றே முக்கால் நாழிகையில் திரயோதசியோடு கூடிய வேளையில் துன்பத்தில் வருந்திய

ஆன்மாக்கள் இன்பம் அடைதற்பொருட்டு உமாதேவியார் காண சிவபிரான் நந்திதேவரின் இரண்டு கொம்புகளுக்கு இடையே நின்று திருநடனம் புரிந்தார். அப்போது தரிசனம் செய்த அத்தனை ஆன்மாக்களுடைய அத்தனை தோஷங்களும் நீங்கிப் பாபம் தொலைந்தது. அதுமுதல் திரயோதசி திதி மாலை நேரம் நாலரை முதல் ஆறு வரை பிரதோஷ காலம் (பாபம் போக்கும் நேரம்) ஆயிற்று. இந்தச் சுபவேளையில் திருக்கோயில் சென்று உமாமகேஸ்வரரை மெய்யன்புடன் வழிபட்டு ஆன்மலாபம் பெறுதல் அத்தியாவசியமாகும். சிவமூர்த்திக்குரிய விரதங்களில் தலையானது பிரதோஷ விரதம் ஆகும்.

3. பிரதோஷத்தின் சிறப்பு யாது ?

பிரதோஷ வேளையில் சிவபிரானைத் தரிசிக்க அத்தனை தேவர்களும் கூடுவதால் பிரதோஷ தரிசனம் செய்பவர்கள் அத்தனை தேவர்களையும் தரிசித்த நற்பலனைப் பெறுவர். அன்றைய தினம் உபவாசம் இருந்து பிரதோஷ தரிசனம் முடித்த பின்னர் உபவாசம் முடிப்பது அதிக நற்பலன்களைத் தரும். நாம் எத்தனை தோஷங்களுடன் ஜென்மம் எடுத்துள்ளோம் என்பது யாருக்கும் தெரியாது. ஆனால் பிரதோஷ உபவாசனையால் அத்தனை தோஷங்களையும் போக்கிடல் முடியும். கலியுகத்தில் நம்மைப்பற்றியுள்ள சகல தோஷமும் நிவாரணமாகி சகல சௌபாக்கியமும் தரும் பிரதோஷ விரதம்.

4. பிரதோஷ வேளையில் நந்தி தேவர் பூஜையின் சிறப்புக்குக் காரணம் யாது ?

சிவகணங்களுக்குத் தலைவர் நந்தி தேவர். சிவாலய வாயிலில் அதிகார நந்தியாக இருந்து பக்தர்களின் மனதை பரிசோதித்து அனுப்பும் அதிகாரம் பெற்றவர். சிவன் சந்நிதியில் காவல் புரியும் நந்திதேவர் தேவர்களின் குறையைக் கேட்டுச் சிவபெருமானிடம் சென்று விண்ணப்பித்துத் துன்பம் போக்கியவர்.

ஒப்பற்ற பெருமை பெற்று தருமமே உருவானவர். சிவபெருமானுக்கு வாகனமாக இருக்கும் பேறு பெற்றவர். திருக்கயிலையில் உமாமகேஷ்வரர் திருஊஞ்சலில் எழுந்தருளும் சமயம் நந்தி தேவர் எதிரில் இருந்து தன் மூச்சுக் காற்றால் ஆவ்வூஞ்சலை ஆடச் செய்வதால் சிவன் சந்நிதிக்கு முன் நந்தி தேவர் தோற்றம் அளிக்கிறார். பிரளயப் பிரதோஷம் எனப்படும் ஊழிக்காலத்தில் அனைத்தும் சிவனுள் அடங்கும் போது நந்தி தேவர் மட்டும் ஒடுங்காமல் சிவபெருமானுடைய வாகனமாக விளங்குவதால் பிரதோஷ காலத்தில் நந்தியெம் பெருமானையும் பூஜிப்பதன் வாயிலாக சிவபெருமான் அருளைப் பரிபூரணமாக அடையலாம். எனவே தான் பிரதோஷ வேளையில் நந்தி தேவருக்கும் சிவபெருமானுக்கும் சேர்ந்து அபிஷேக ஆராதனைகள் கொண்டாடப்படுகிறது.

5. பிரதோஷ விரதம் அனுஷ்டிப்பதால் அடையக்கூடிய நன்மைகள் பலன் யாது ?

1. துன்பம் நீங்கி இன்பம் எய்துவர்
2. மலடு நீங்கி மகப்பேறு பெறுவர்
3. கடன் நீங்கி தனம் பெறுவர்
4. வறுமை ஒழித்து செல்வம் சேர்ப்பர்
5. நோய் நீங்கி நலம் பெறுவர்
6. அறியாமை நீங்கி ஞானம் பெறுவர்
7. பாவம் தொலைந்து புண்ணியம் எய்துவர்
8. தடைகள் நீங்கி திருமணம் நடைபெறும்
9. சகல தோஷங்களும் நீங்கி சுகம் பெறுவர்
10. பிறவி ஒழித்து முத்தி அடைவர்.

இவை அனைத்தும் பிரதோஷ விரதம் அனுஷ்டித்து நற்பலன் பெற்றவர்களின் அனுபவ உண்மைகள்.

6. பிரதோஷ தரிசனத்தின் மகிமை யாது ?

சிவப்பிரதோஷ காலத்தில் சப்த கோடி தேவர்களும் சிவபெருமானிடத்தில் ஐக்கியம் ஆகிறார்கள். அந்நேரம் சிவபெருமானை வணங்கும்போது சப்தகோடி தேவர்களையும் சேர்த்து வணங்கிய பெரும்பேறு நமக்குக் கிடைப்பதால் நாம் பதினாறு பேறுகளையும் பெற்று பயனடைவதோடு அஸ்வமேதயாகம் செய்த புண்ணிய பலனும நமக்குக் கிடைக்கிறது. மேலும் சிவபெருமான் பிரதோஷ காலத்தில் இடபதேவரின் இரு கொம்புகளுக்கு இடையே உயிர்கள் உய்யும் பொருட்டு திருநடனம் புரிந்தார். அப்போது சரஸ்வதி வீணை வாசித்தாள். இந்திரன் புல்லாங்குழல் ஊதினார். பிரம்மதேவர் தாளம் போட்டார், லட்சுமி தேவி பாடினாள். திருமால் மிருதங்கம் வாசித்தார். தேவர்கள், முனிவர்கள், சித்தர்கள், யக்ஷர்கள், கின்னர்கள், திசைபாலகர்கள் அனைவரும் வந்து பிரதோஷ காலத்தில் இறைவனை வழிபடுவதால் அத்தனை மூர்த்திகளையும் வழிபாடு செய்த பாக்கியத்தை நாம் அடைகிறோம்.

7. பிரதோஷத்தன்று வழிபடும் முறை யாது ?

மானிடப் பிறவி எடுத்த பயன் வீணாகாமல் இருப்பதற்கு இப்பிரதோஷ காலத்தில் விரதத்தை நமது நித்யகர்மாபோல அவசியம் அனுஷ்டித்து ஆலய வழிபாடு செய்து சோம சூக்த பிரதட்சிணம் செய்து வழிபடல் வேண்டும்.

8. சோமசூக்தப் பிரதட்சிணம் என்றால் என்ன ?

ஆலகால விஷத்தால் தாக்குண்ட தேவர்கள் சிவபெருமானைச் சரணடைய கயிலைக்கு வலமாக ஓடினார்கள். அப்போது அவர்களை ஆலகால விஷம் அப்பிரதட்சிணமாகச் சென்று தாக்கியது. அதற்கு அஞ்சிய தேவர்கள் வந்த வழியே திரும்பி வர ஆலகால விஷம் அந்தப் பக்கத்திலும் எதிர் வந்து தாக்கியது.

இவ்வாறாக ஆலகால விஷம் தேவர்களை முன்னும் பின்னும் வலமும் இடமுமாகத் துரத்தியது. அதிலிருந்து தப்பி ஓடிய தேவர்கள் பரமேஸ்வரனை சரணடைய பரம கருணா சாகரராகிய சிவபெருமான் அவர்களைக் காக்கும் பொருட்டு அவ் ஆலகால விஷத்தை உண்டு தம் கண்டத்தில் தாங்கி திருநீலகண்டர் என விளங்கினார். நாமும் சோமசூக்தமாக பிரதக்ஷணம் செய்தால் சிவனருள் நிச்சயம், சோம சூக்தம் என்பது சிவமூர்த்தியின் அபிஷேக நீர் வந்து விழும் கோமுகி தீர்த்தத் தொட்டியைக் குறிக்கும். ஒரு பிரதக்ஷணம் என்பது முதலில் நந்திதேவரை வணங்கி இடமாக அப்பிரதக்ஷணமாகச்

சென்று சண்டேவரரை வணங்கிவிட்டு அங்கிருந்து பிரதஷ்ணமாக நந்தியை வந்து மீண்டும் வணங்கி பின்னர் வலமாக பிரதக்ஷணமாகச் சென்று அபிஷேக தீர்த்த கோமுகியை தாண்டாது அங்கிருந்தபடி விமான தரிசனமும் பிரதோஷ லிங்கத்தையும் தரிசித்துவிட்டு மீண்டும் அப்பிரதக்ஷணமாக வந்து நந்தி தேவரின் இரு கொம்புகளுக்கிடையே சிவமூர்த்தியைக் கண்டு வணங்க வேண்டும். இப்படி செய்வது ஒரு பிரதக்ஷணம். இவ்வாறாக குறைந்தது மூன்று முறை செய்ய வேண்டும். அதிகம் செய்தால் அதிக பலனை அடைவது உறுதி. அவ்வமயம் தக்ஷிணாமூர்த்தி சந்நிதியில் செய்யப்படும் பஞ்சாட்சர ஜெபத்திற்கு ஒன்றுக்கு ஆயிரமாக நற்பலனை அடைவது உறுதி.

ஆன்மீகத் தொகுப்பிலிருந்து.. .. .. .. ..

ஷாளினி கிருபாகரன்

## தமிழ்த்தாய் மண்ணேவணக்கம்

தமிழ் மொழியைத் தென்மொழியாகவும். சமஸ்கிருதத்தை வடமொழியாகவும் எடுத்துக்கொள்ளுகிறோம். வடக்கிலும் கிழக்கிலும் வேறு பல மொழிகளும் இருக்கின்றன.

முன்னொரு காலத்தில் இந்தியா முழுவதிலும் ஈழம் உட்பட ஓரின மக்களே வாழ்ந்தனர். ஓரே திராவிட மொழியையோ, கிளை மொழிகளையோ பேசினர். வடஇந்தியாவிலும் சரி இன்று வழங்கும் மொழிகள் யாவற்றிற்கும் ஏதோவோரு பண்டைத் திராவிட மொழியே மூலமெனப் பல அறிஞர்கள் கூறியுள்ளனர். ஒரு மொழியே பதினெட்டாகியதென மேரு மந்திர புராணம் கூறுகிறது. இம்மொழியே எகிப்து மேற்கு ஆசிய கிழக்காசிய கிழக்காசிய கிழக்கிந்திய தீவுகள் முதலிய நாடுகளிற் பண்டைக்காலத்தில் வழங்கிய மொழிகள் எல்லாவற்றிற்கும் மூலமொழியாகும் என்கின்றனர் இம்மூலமொழி பண்டைத் தமிழாக இருக்கலாம் அல்லது பண்டைத் தமிழ் இம்மூல மொழியினின்று தோன்றியிருக்கலாம் (இதை எத்தனை பேர் சிந்திக்கின்றார்கள்)

காலத்திற்கு காலம் வட இந்தியாவிற்குள் பல பிற நாட்டவர்கள் புகுந்து அரசையும் கைப்பற்றி ஆண்டனர். இவர்களுடைய குழுப்பேச்சு மொழிகள் கடந்து மாற்றடைந்தன. ஒரு மொழியின் மூலத்தை அதன் சொற் தொகுதியிலிருந்தும், வசன நடையிருந்தும் காணமுடியாது. அதன் இலக்கண வரம்புகளிலிருந்தும் வசன அமைப்பிலிருந்தும் காணவேண்டும். இவ்வாறு ஆராய்ந்த மொழியியல் வல்லுனர் வட இந்திய மொழிகளுக்கும், திராவிடமே மூல மொழி எனக் கூறுகிறார்கள். கி.மு 2000 ஆண்டு அளவிலும், அதன் பின்பும், மத்திய ஆசியா, ஈரான் போன்ற நாடுகளிலிருந்தும் பல நாடோடிக் குழுக்கள் இந்தியாவிற்குள் புகுந்து மொழிக்கலப்பு ஏற்பட்டு, இன்று பேசப்படும் மொழிகள் பெரும் பாலும் கலப்பு மொழியாகவே இருக்கின்றன. சங்ககாலத்திற்கு பின்பு 500 வரை தமிழ் நாம்டிலும் சமஸ்கிருதம் ஆட்சி மொழியாக இருந்தது. இக்காலத்தில்தான் தமிழில் அனேகம் சமஸ்கிருத மொழிக்கலப்பு உண்டாகியது. இந்து சமயம் பொதிந்த மொழி சமஸ்கிருதமாகையால் இந்துக்கள் பலர் இதைத் தெய்வ மொழியாக கருதுகின்றனர். ஆரியமும் தமிழும் ஒரு சாதிதியாக வழங்கிய இரு வேறு மொழிகள் ஆனால் மூலம் ஒன்றே.

# அறிவுக்கு விருந்து

பிற மனிதர்கள் உங்களுக்கு என்னென்ன செய்ய வேண்டும் செய்ய வேண்டும் என்று நீங்கள் விரும்புகிறீர்களோ அவ்வாறே அவர்களுக்கு நீங்கள் செய்யுங்கள். அதுதான் நீதியும் தீர்க்க தரிசிகள் நெறியும் ஆகும்.

(இயேசு நாதர்)

தன்னுடைய சிறு குழந்தைகளிடம் அன்பு காட்டாதவனும் மூத்தவர்களுக்கு மரியாதை செலுத்தாதவனும், என் அன்புக்குரியவன் அல்லன்.

( நபிகள் நாயகம்)

விழித்துக் கொள்ள வேண்டிய நேரத்தில் எவர் விழித்துக்கொள்ளாமல் இருக்கிறார்களோ, இளமையும் பலமும் இருந்தும் எவர் சோம்பிக் கிடக்கிறார்களோ எவருடைய கருத்தும் சிந்தைனையும் பலவினமாக இருக்கிறதோ, அந்த மந்த புத்திக் காரனான சோம்பேறியால் ஒரு போதும் அறிவு வழியைக் கண்டறிய முடியயாது

(புத்தர்)

மதிமயக்கத்தினால் ஒருவன் கயிற்றைக் கயிறெனக் கொள்ளாமல் பாம்பைக் காண்கிறான், அதைப் போலவே புத்தி மயங்கியவன் உண்மையறியாமல் இவ்வுலகைக் காண்பான். கயிறின் உண்மை உருவம் தெறிந்தும் பாம்பின் தோற்றம் மறைகிறது. அதைப் போலவே இறுதியான உண்மையைக் கண்டதும் உலகம் மறைந்து விடுகிறது.

(ஆதி சங்கரர்)

மானிடப் பிறவி அரிதிலும் அரியது, மானிடப் பிறவி, வீடுபேற்றின் மீதுள்ள பேரார்வம், சித்தியடைந்த முனிவர் ஒருவரின் பாதுகாப்பு பெறுதலை இவை மூன்றும் இறைவனின் அருளினாலே கிடைக்கப் பெறுவனாகும்.

(ஆதி சங்கரர்)

சாதகப் பறவை மழை நீரை மட்டுமே அருந்தும், புண்ணிய நதிகளில் ஏராளமாக நீர் பெருக்கெடுத்து ஓடிக் கொண்டிருந்தாலும், பூமியில் படிந்த நீரை அப்பறவை அருந்தாது. அவ்வாறே இறையருளில் நாட்டமுள்ளவர்கள் எப்போதும் அவன் அருளையே நாடி நிற்பர்.

( ராமகிருஸ்ண பரமகம்சர்)

தொகுப்பு இணுவைக் குமரன்

உ

அருள்மிகு துர்க்காதேவி இந்து தேவஸ்தானம்

**ARUL MIGU THURKADEVI HINDU SOCIETY (BC)**

**7468 Edmonds St, Burnaby,V3N 1B2. Tel : (604) 521-3472**

பதவிகள் வெற்றிடம்

## பொது உதவியாளர்

ஆலய நிர்வாகத்தின் பணிப்புரைகளுக்கமைய, ஆலயத்தின் நாளாந்த தேவைகளைக் கவனித்து, பொது உதவியாளராக கடமை புரியக்கூடிய, ஐம்பது வயதுக்கு மேற்பட்டவர்களிடம் இருந்து மேற்படி பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தகுந்த ஈட்டுப்படி (allowance) வழங்கப்படும்.

## ஆசிரியர்கள்

அருள்மிகு துர்க்காதேவி இந்து தேவஸ்தான சைவ தமிழ்ப் பாடசாலையில் பிரதி ஞாயிறு தோறும் காலை 10 மணியிலிருந்து 12 மணிவரை தமிழ் சமயக் கல்வி கற்பிக்க தகுதியுள்ள இருபாலாரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தகுந்த ஈட்டுப்படி (allowance) வழங்கப்படும்

## துப்பரவுப் பணியாளர்

ஆலயத்தின் துப்பரவுப் பணிக்கு அனுபவம் உள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. மாதாந்தப் பொருத்தமுறையிலோ(contract) அல்லது நாளாந்த சம்பள முறையிலோ தகுந்த ஊதியம் வழங்கப்படும்

விண்ணப்பிக்க விரும்புபவர்கள் தங்களைப் பற்றிய பூரண விபரங்கள் அடங்கிய விண்ணப்பத்தை, ஒக்டோபர் மாதம் 30ம் திகதிக்கு (30 -10 - 2005) முன்பாக, செயலாளரிடம் நேரடியாகவோ, ஆலய விலாசத்திற்கு தபால் மூலமாகவோ சமர்ப்பிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

*(ஆலய நிர்வாகக் குழுக்களில் அங்கம் வகிப்பவர்கள் விண்ணப்பிக்க முடியாது.)*

மேலதிக விபரங்களுக்கு கீழ்க்காணும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளலாம். மூர்த்தி(604) 520-6356, குமாரசாமி (604) 521-3763 நடராஜா (604) 321-3722